களுக்குமே எரி வாய்வு சப்ளைச் செய்யக்கூடிய அளவுக்கு கேப்பாசிட்டி அதற்கு இருப்பதாக சொல்லப்படுவது உண்மையா? அப்படியானால பல ஆயிரக்கணக்கான ரூபாய் அதை மெயின் டெயின் செய்வதற்கு செலவழிக்கப்படுகிறது என்பது உண்மையா இன்று அதை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் இல்லை என்றால் ஆயிரக்கணக்கான ரூபாய் வீணாக செலவு ஏற்படுவதை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. இப்போது உடனடியாக புதுப்பித்து அதை செயல் முறையில் கொண்டு வந்து நமக்கு பயன் அளிக்கக்கூடிய நிலமைகளை ஏற்படுத்தவேண்டும் என்று தான் உத்திரவு போட்டிருக்கிறோம். இன்றைக்கு நாம் பணத்தையும் ஒதுக்கி இருக்கிறோம்.

திரு ரா. கிருஷ்ணன் ' மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது செயல்படாமல் இருப்பதற்கு காரணம் யார் என்று ரெஸ்பான்ஸிபிளிட்டி பிக்ஸ் பண்ண வேண்டும் என்று உத்தரவு போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் யார் மீது ரெஸ்பான்ஸிபிளிட்டி பிக்ஸ் பண்ணப்பட்டிருக்கிறது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ,தொடர்ந்து இலாக்காவிலிருந்து இது கூட்டு பொறுப்பு என்றும், யார் ரெஸ்பான்ஸபிளிட்டி என்று பிக்ஸ் பண்ண முடியாது என்றும் ஒவ்வொரு தடவையும் நாம் கோப்பு அனுப்புகிற போது பதில் வந்திருக்கிறது. இதற்கு சாட்சியங்கள் இல்லை என்று பதில் வந்திருக்கிறது, நாம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. என்ன இருந்தாலும் எவ்வளவு பெரிய உயர் மட்ட அதிகாரியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முறையில் சொல்லியிருக்கிறோம். எப்படியாவது இதை ஒரு அசுரன்ஸாக நான் இங்கே சொல்லி அது அசுரன்ஸ் கமிட்டிக்கு வரவேண்டும் என்பதற்காக நான் சொல்லியிருக்கிறேன். எப்படியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்.

அரசு மருத்துவமனைகளிலுள்ள அறுவை சிகிச்சை
அறைகளில் அவசர விளக்குகள் பொருத்தும் திட்டம்

*வினா எண். 52—திரு வி. பாலகிருஷ்ணன் , மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் அவசர விளக்குகள் அறுவைச் சிகிச்சை அறைகளில் பொருத்தப்படும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது பொருத்தப்படும?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே , (அ) ஏற்கெனவே பல அரசு மருத்துவமனைகளில் அவசர விளக்குகள் அறுவைச் சிகிச்சை அரங்கில் பொருத்தப்பட்டுள்ளன.

1982 செப்டம்பர் 10]

(ஆ) மாவட்ட மருத்துவ அலுவலர்களுக்கு இதுவரை அவசர விளக்குகள் இல்லாத அரசு மருத்துவமனைகளில் அவசர விளக்குகள் பொருத்துவதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டு உள்ளது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் ஆவது ஜெனரேட்டர் இயந்திரங்கள் வாங்கி வைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாவட்ட தலைமை மருத்துவ மனைகளைத் தவிர மற்ற எல்லா மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் இந்த இயந்திரங்கள் பொருத்த ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த இரண்டுக்கும் நடவடிக்கை எடுக்க இப்போது உத்திரவு போட்டிருக்கிறோம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த எமர்ஜென்ஸி லெம்ப்ஸ் ஏற்படுத்தவேண்டும் என்பதற்கு காரணம், திடீரென்று கரண்டு இல்லாமல் போகும் போது இதை பயன்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான், கரண்டு வீக் ஆக வந்து அதன் காரணமாக ஆப்பரேஷன் தியேட்டர்களுக்கு மட்டும் இல்லாமல் அங்கே இருக்கிற இயங்குகிற எக்ஸ்ரே மிஷன்கள் உட்பட்ட பல மிஷன்கள் இயங்காமல் போகக்கூடிய அபாயம் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. அதற்காக கோவையிலே சி.எம்.சி. மருத்துவ மனையில் தனியாக ஒரு பெரிய டிரான்ஸ்பார்மர் ஏற்படுத்த வேண்டும் என்று உத்திரவு போடப்பட்டிருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதை நடத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டாகிவிட்டது. வோல்டேஜ் டிராப் என்ற பிரச்சினை எல்லா வீடுகளிலும் நடைபெறுகிறது. அதற்கு ஸ்டெபிளைஸர்தான் பொருத்தப்படவேண்டும். இல்லையென்றால் மெஷின் பழுதுபட்டுக் கெட்டுப்போய்விடும். ஆகவே எல்லா இடங்களிலும் ஸ்டெபிளைஸர் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். டிரான்ஸ்பார்மர்களைப் பொறுத்த வரையில் எல்லா மருத்துவமனைகளிலும் கல்லூரிகள் இணைக்கப் பட்ட மருத்துவமனைகளில் — கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளில் மின்சார விளக்கு பொருத்துவது சம்பந்தமான முக்கியமான கேள்வி இது. நான்கூட தஞ்சாவூரில் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன், ஒருவரைப் பார்ப்பதற்கு. 8 மணியிலிருந்து 9 மணி வரையில் மின்சாரம் நின்றுவிட்டது. மாத்திரை பெறக்கூடியவர்கள், ஊசி போடப்படுகிறவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசு மருத்துவமனைகள் சம்பந்தப்பட்ட கேள்வி. மின்சாரம் ஊர் பூராவும் சில சமயங்களில் தடைபடுகிறது என்றால் அதைப்பற்றி இந்த அமைச்சர் பதில் சொல்ல முடியாது. அது வேறு.

மன்னார்குடி அரசினர் மருத்துவ மனையின் தகுதியை
உயர்த்தும் திட்டம்.

* வினா எண். 53—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி அரசினர் மருத்துவ மனையின் தகுதி நிலையை உயர்த்தக் கோரி 14—7—1980 அன்று அரசுக்கு விண்ணப்பம் வந்ததா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மன்னார்குடி அரசினர் மருத்துவமனையின் தகுதியை உயர்த்தக்கோரி கீழ்க்கண்ட விஸ்தரிப்பு வேலைகள் அம்மருத்துவ மனைக்குத் தேவையென்று குறிப்பிட்டு 14—7—80-ம் நாளிட்ட சட்ட மன்ற உறுப்பினர் திரு. அம்பிகாபதியின் கடிதம் மருத்துவப் பணி மற்றும் குடும்பநலத்துறை இயக்குநருக்கு வந்துள்ளது.

(1) குடும்ப நல அறுவை சிகிச்சை அரங்கு.

(2) குடும்ப நல அறுவை சிகிச்சைக்கான 12 படுக்கைகள் கொண்ட அரங்கு

(3) காச நோய் உள் நோயாளிகள் பகுதி

(4) பால்வினை நோய் பகுதி

(5) 'சி' வகுப்பு தனி நோயாளிகள் பகுதி

இவைகள் வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.